**கவனிக்க.-** *2017.04.07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2015 - 2017 අප්‍රේල් මස 12 වැනි බදාදා - 2017.04.12

*2015 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி III - காணிகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 44 |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** புற்றுநோய் பராமரிப்பு நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2017, ஏப்பிறல் மாதம் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2017, மே மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, ஏப்பிறல் மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

***கங்கானி லியனகே,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

43- B81160 -353(2017/4)

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/49341.
பிரதேச செயலாளரின்
இல. : BD/HD/LNDI/L/T/2016.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பதுளை மாவட்டம், ஹல்தும்முல்ல பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. 157 கே. வடகமுவ மற்றும் 158 பீ ஹரங்கஹவ கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ஹால்அடுதென்ன மற்றும் ஹரங்கஹவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளரினால் வரையப்பட்ட அ. க. பி. 296 இல் காணித்துண்டு இலக்கம் 199,200 மற்றும் அ.க. பி. 296 இல் காணித்துண்டு இலக்கம் 243 எனக் காட்டப்பட்டுள்ளதும் 0.4047 ஹெக்டேயர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காகக் குத்தகைக்கு தருமாறு கேட்டு ஹுரியஹெலபதன தனியார் நிறுவனம் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

காணித்துண்டு இல. 199 ஐ பிரதிநிதிப்படுத்தும் காணி :

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 202 ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 202;
தெற்கு: காணித்துண்டு இலக்கம் 202 மற்றும் அ.க.பி.297, ஹரங்கஹவ (பகுதி) ;
மேற்கு: அ. க.பி. 297, ஹரங்கஹவ (பகுதி), காணித்துண்டு இலக்கம் 22ட மற்றும் 202.

காணித்துண்டு இல. 200 இன் பிரதிநிதிப்படுத்தும் காணி :

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 201, 43 மற்றும் 202;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 202, 22ட மற்றும் அ.க.பி.297, ஹரங்கஹவ (பகுதி) ;
தெற்கு: அ.க.பி. 297, ஹரங்கஹவ (பகுதி) ;
மேற்கு: காணித்துண்டு இலக்கம் 201 மற்றும் 43.

காணித்துண்டு இல. 243 இன் பிரதிநிதிப்படுத்தும் காணி :

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 244, அ.க.பி.296, ஹால்அடுதென்ன மற்றும் காணித்துண்டு 239;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 239, அ.க.பி. 296 ஹால்அடுதென்ன மற்றும் காணித்துண்டு இலக்கம் 245 ;
தெற்கு: காணித்துண்டு இலக்கம் 245;
மேற்கு: அ.க.பி. 297, ஹரங்கஹவ (பகுதி), காணித்துண்டு இலக்கம் 22ட மற்றும் 202.

3. குறித்த காணியானது குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் உள்ளது. ஆகவே, அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளுடன் பின்வரும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (கௌரவ அமைச்சர் அனுமதித்த 2017.03.17 ஆந் திகதி தொடக்கம் முன்னோக்கி);

**வருடாந்த குத்தகைப்பணம்.**-பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டிற்கமைய கௌரவ அமைச்சர் அனுமதித்த 2017 ஆம் ஆண்டிற்கான சந்தைப் பெறுமதியின் 4 % ஆகும். (குத்தகையாளரினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் தவிரந்த) இக் குத்தகைப் பணமானது 05 வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அது முன்னைய 5 வருடங்களின் இறுதிப் பகுதியில் அறவிடப்பட்ட குத்தகைப் பணத்தின் 50 வீதத்திற்கு குறையாது இருத்தல் வேண்டும்;

தவணைப்பணம்.- வருடாந்த குத்தகையின் மும்மடங்கு தொகை;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) இக்குத்தகையானது பிரதேச செயலாளர், மத்திய சுற்றாடல் அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை முதலீட்டுச் சபை, உள்நாட்டு இறைவரித் திணைக்களம், தொல்பொருட் திணைக்களம் மற்றும் குறித்த ஏனைய திணைக்களங்களால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் உட்பட்டிருத்தல் வேண்டும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டுள்ள மற்றும் நிர்மாணிக்கப்படும் கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) குறைந்தது 5 வருடங்கள் நிறைவு பெறுவதற்கு முன்னர் இக்காணியை வேறு குத்தகையில் வழங்க முடியாது;

(ஏ) குத்தகைப்பணம் தொடர்ச்சியாக முறைப்படி செலுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறு செலுத்தப்படா விடின் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணியானது குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்கான தகுந்த காரணங்களை இவ்வறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் விண்ணப்பத்தின் பிரகாரம் இக்குத்தகை வழங்கப்படும்.

டபிள்யூ. பீ. கே. ஷியாமலி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
"மிஹிகத்த மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2017, ஏப்பிறல் 12.

4- 370